MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# பருவ காலங்களும் பண்புகளும்

**உ.ச.எ. தமிழரசன்,**உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,சிவகாசி
DOI 10.5281/zenodo.12750280.

**Abstract :**

**Land and time are primary. Human life is related to matter. All living things on land are in contact with earth. Elapsed time is imperishable. Seasons are also responsible for the activities of the five planets. This article examines the characteristics of seasons such as major seasons, seasonal characteristics, summer characteristics, summer characteristics, normal characteristics of seasons, paradoxical characteristics.**

**Key Words : Grammar - Living Land - Human Life**

நிலமும் பொழுதும் முதற்பொருளாகும். மனித வாழ்வு முதற்பொருளோடு தொடர்புடையது. நிலத்தில் வாழும் அனைத்து உயிர்களும் பொழுதோடு தொடர்பு கொண்டு நிற்கின்றன. காலமாகிய பொழுது அழியாப் பொருள். ஐந்திணைகளின் செயல்பாடுகளுக்கும் பருவ காலங்களே காரணமாகின்றது. பெரும் பொழுதுகள், கார்காலப் பண்புகள், கூதிர் காலப் பண்புகள், வேனிற் காலப் பண்புகள், பொழுதுகளின் இயல்பான பண்புகள், முரண் பண்புகள் போன்ற பருவ காலங்கள் சார்ந்த பண்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### நிலமும் பொழுதும்

காலம் அல்லது பொழுது என்பது மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், இருது, அயநம், ஆண்டு, உகம் எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறது. வாழ்க்கை முறை என்பது வாழும் இடம், காலம், சூழல் போன்றவற்றோடு தொடர்புடையது. மக்களின் வாழ்வியல் முறைக்கு இடமே அடிப்படை. நிலத்தினை முதன்மைப்படுத்தி தொல்காப்பியர்,

**“நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே” (தொல்.பொருள்.அகத். நூற்.2)**

என்று குறிப்பிடுகிறார். நிலத்தை,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாய் சொல்லவும் படுமே”**

**(தொல்.பொருள்.அகத்.நூற்.5)**

எனப் பாகுபடுத்துகிறார்.

அகத்திணைக் கூறுகளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகைப்படுத்துகின்றனர். முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**“முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்**
**இயல்பு என மொழிப இயல்புணர்ந்தோரே”**

**(தொல்.பொருள்.அகத்.நூற்.4)**

பொழுது என்பது இயற்கை நிகழ்வு. இயற்கையோடு ஒன்றி நிலைத்திருப்பது என்பதை அறிய முடிகிறது. சங்க கால மக்கள் இயற்கைச் சார்புடைய வாழ்க்கைக்கு முதன்மை அளித்தனர். வாழ்வியல் சூழலுக்கும் உண்டாகின்ற நிகழ்வு மாற்றங்களுக்கும் நிலம், பொழுது காரணமாக அமைந்தன.

“குறிப்பிட்ட நிலத்தின் பருவ நிலைக்கும் இயற்கை வளத்துக்கும் ஏற்பட்ட மாறுதல்கள் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ திகழ்ந்து, வாழ்க்கைப் போக்கை அமைப்பதற்கு முதல் காரணமாய் இயற்கை அமைகின்றது” (மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.31-32)

மனிதனின் வாழ்வியலுக்கு அடிப்படைத் தேவையாக நிலமும் பொழுதும் விளங்குகின்றன. நிலத்தில் வாழும் அனைத்து உயிரினங்களும் காலத்திற்குள் கட்டுப்பட்டு வாழ்கின்றன. இதனால் தான் நிலமும் காலமும் முதற்பொருளாகக் கருதப்பட்டன. முதற்பொருள் வழி உருவானவை கருப்பொருள் எனப்பட்டன.

**பெரும்பொழுது**

பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது என்பது ஒரு ஆண்டின் பகுப்பு. சிறுபொழுது என்பது ஒரு நாளின் பகுப்பு.

“இருதிங்கள் சேர்ந்த காலப்பகுதி பருவம் அல்லது இருது எனக் கொள்ளப்படும் ஆவணி தொடங்கி இரண்டு இரண்டு மாதங்களாக முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பருவங்கள் கொள்வர்” (நிகண்டுச் சொற்பொருட் கோவை, ப.22) பெரும்பொழுதுகள் பற்றி நிகண்டுச் சொற்பொருட்கோவை குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் அகத்திணையியிலில் பெரும்பொழுதுகளை ஐவகை நிலங்களுக்குரிய பொழுதுகளாக வகைப்படுத்துகிறார். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பெரும்பொழுது ஆறு வகைப்படும்.

சூரியன் பூமியின் கீழ்த்திசையில் தென்பாகத்தில் சில காலமும் வடபாகத்தில் சில காலமும் மத்திய ரேகைப் பகுதியில் சில காலமும் இருப்பதால் கிரகணங்கள் ஏற்படுகின்றன. பூமியின் மேல் ஒரே அளவாக விழாமல் மாறுபட்டு வருவதால் கிரகணத்தின் தன்மையை ஒட்டிக் காலநிலைகள் மாறுபடுகின்றன.

| காலம் | மாதம் |
|---|---|
| கார் காலம் | ஆவணி, புரட்டாசி |
| கூதிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனி | மார்கழி, தை |
| பின்பனி | மாசி, பங்குனி |
| இளவேனில் | சித்திரை, வைகாசி |
| முதுவேனில் | ஆனி, ஆடி |


http://Creativecommons.org//license/by/4.0/.

என ஆறுபருவங்களாகவும் இரண்டு இரண்டு மாதங்களாகவும் பெரும்பொழுதைப் பிரித்தனர்.

இந்த ஆறு பருவங்களையும் மழைக்காலம், பனிக்காலம், வெயில்காலம் என மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்தனர். மழையின் முற்பகுதி கார் எனவும், பிற்பகுதி கூதிர் எனவும் பகுத்தனர். முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன அவ்வப்பருவத்தின் முன், பின், பகுதி கொண்ட பெயர்களாகும்.

தட்ப வெப்பநிலை மாற்றங்கள், பருவநிலை மாற்றங்கள் அதனால் மக்களின் வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் காலச் சுழற்சியால் ஏற்படுபவை. பெரும்பொழுதுகள் ஆறு வகைப்படும் என்ற குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. பொழுதுகளின் பிரிவுகள் உரையாசிரியர்களால் வகுக்கப்பட்டவை.

“ஆறு என்ற தொகைக் குறியீடு தொல்காப்பியத்துள் இல்லை. அ∴து உரையாசிரிரியர்களால் பெறப்படுவதுவே. கார், கூதிர், பனியெதிர் பருவம், வேனில், பின்பனி முதலான பெயரீடுகளே தொல்காப்பியத்தில் உள்ளன. இவற்றிற்குரிய மாதக் கணக்கீடுகள் மூலநூலுள் இல்லை. எனினும் உரை நூல்கள் அவற்றை விரித்துரைக்கும்” (க.ப.அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும், ப.103-104). இதன்வழி பெரும்பொழுதுகள் ஆறு என்று சுட்டப்பெறுவதை அறிய முடிகிறது. காலச் சுழற்சியில் ஏற்படுகின்ற மாற்றங்களால் பருவ மழை குறைதல், பருவம் மாறி மழை பெய்தல் போன்ற இயற்கை மாற்றங்கள் நிகழ்கின்றன.

**கார்காலம்**

கார்காலம் மழைக்காலம். ஆவணி, புரட்டாசி மாதங்கள் கார்காலத்திற்குரியதாகும். அக்கார்காலத்தில் மழையின் தன்மை, நிலம் பெறுகின்ற மாற்றம், அழகு பெற்ற முல்லை நிலம், உயிரினச் செயல்பாடுகள், தலைவியின் மன உணர்வுகள், கார்காலக் காட்சிகள், போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்.

கார்காலத்தை முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**“காரும் மாலையும் முல்லை” (தொல்.பொருள்.அகத்.நூற்.6)**

பிற பொழுதுகளும் முல்லை நிலத்தில் இருந்தாலும் முல்லை நிலத்திற்குரிய பருவம் கார்ப்பருவம் என்பதைத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது.

வானில் தவழும் மேகங்கள் கடல்நீரை முகந்து வானில் நெருங்கி இருண்டு மிக்க மழையைப் பெய்து கடுமையான இடிக்குரலையும் செய்து கார்கால மழைப்பொழிவைக் காட்டியதை நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கிறது.

**“சொல் புடைபெயர்தலோ இலரே வானம்
நளி கடல் முகந்து செறிதக இருளி
கனை பெயல் பொழிந்து கடுங்குரல் பயிற்றி
கார்செய்து என் உழையதுவே ஆயிடை” (நற்.289: 3-6)
“இரு விசும்பு அதிர மின்னி
கருவி மா மழை கடல் முகந்தனவே” (நற்.329: 10-11)**

கார்கால மழையின் போது மேகம் மலைமீது திரள் திரளாகத் தோன்றி பஞ்சு போன்ற தோற்றத்தில் உள்ளதை,

**“கார்தலை மணந்த பைம்புதற் புறவின்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

**வில்எறி பஞ்சியின் வெண்மழை தவழும்" (அகம்.133: 5-6)**

என்னும் அகநானூற்று அடிகள் எடுத்து இயம்புகின்றன.

கார்ப்பருவத் தொடக்கத்தில் மழையைக் கொண்டு வரும் முகில் மலையை வலஞ்சூழ எழுந்து, பரந்த வானம் இடியுடன் மழைபெய்யத் துவங்கும் என்பதை,

**"வன்புல நாடன் தரீஇய வலன் ஏர்பு**
**அம்கண்இரு விசும்புஅதிர ஏறொடு**
**பெயல் தொடங்கின்றே வானம்" (ஐங்.469: 2-4)**
**"கருவி வானம் பெயறொடங்கின்றோ" (ஐங்.488: 1)**
**"ஏறுமுரண் சிறப்ப ஏறு எதிர் இரங்க**
**மான் பிணை மறியொடு மறுக்**
**மாதர் கார் தொடங்கின்றே காலை"(ஐங்.493: 1-3)**
**"நின்னே போல் மஞ்ஞை ஆல**
**கார் தொடங்கின்றால் பொழுதே" (ஐங்.413:2-3)**

மேற்சுட்டிய பாடலடிகள் கார்காலம் தொடங்கப்பட்ட விதத்தினைக் கூறுகின்றன.

**கார்கால மேக நகர்வு**

கார்காலத்தில் மேகங்களின் நகர்வு இருக்கும் தன்மை குறித்துக் குறிப்பிடும் கருத்துக்களைச் சங்கப்பாக்களில் காணமுடிகின்றது.

**"மா மலைவிடரகம் விளங்க மின்னி**
**மாயோள் இருந்த தேஎம் நோக்கி**
**வியலிந விசும்பகம் புதையப் பாஅய்ப்**
**பெயல் தொடங்கினறே பெய்யா வானம்" (நற்.371: 2-5)**
**"விசும்பு உரியது போல் வியலிடத்து ஒழுகி**
**மங்குல் மா மழை தென்புலம் படரும்" (அகம்:24: 7-8)**

மேற்சுட்டிய சான்றுகள் கார்கால வான்மழையினை எடுத்துரைக்கின்றது.

கார்காலத்தில் பருவம் மாறிச் சற்று முன்னதாகவே பொழியும் மழையினை வம்பமாரி என்பர். பருவம் மாறி பெய்யும் இம்மழை மயக்கம் தரவல்ல புதிதாகப் பெய்யும் பருவம் பொய்த்த மழை என்பதை,

**"பூஅமல் தளவமொடு தேங்கமழ்பு கஞல**
**வம்புப் பெய்யுமான் மழையே வம்பு அன்று**
**காரிது பருவமாயின்" (குறுந்.382: 3-5)**

குறுந்தொகை அடிகள் குறிப்பிடுகின்றன.

கார்காலத்திற்குத் தொடர்பில்லாமல் பெய்யும் மழையை ஏதில மழை என ஐங்குறுநூறு சுட்டுகின்றது.

**"ஏதில பெய்ம்மழை கார் என மயங்கிய" (ஐங்.462:1)**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

மழை பொழிதல், முல்லை மலர் மலருதல், ஆற்றில் நீர்ப்பெருகி வருதல், தேரை ஒலித்தல் போன்றவை கார்ப்பருவ வரவை இனங்காணச் செய்பவையாக உள்ளன.

**“பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகு முகை யிலங்கெயிறாக**
**நகுமே– தோழி நறுந்தண் காரே” (குறுந்.126: 3-5)**

கார்கால மழை இறங்கிப் பெய்தலைக் கால்வீழ்தல் என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. மேகம் காலிறங்கிப் பெய்தலை,

**“ஆலி அழிதுளி தலைஇக்**
**கால்வீழ்த் தன்று நின் கதுப்பு உறழ் புயலே” (அகம்.323: 12-13)**

என்றும்,

**“மாதிரம் புதையப் பாஅய் கால்வீழத்து” (அகம்.364: 1)**

என்றும் கார்கால மழை இறங்கிப் பெய்தலைக் குறித்து வந்துள்ளன.

இடியோடும் மின்னலோடும் பெய்யும் மழை குறித்த பதிவுகளையும் சங்கப் பாக்களில் காண இயலுகின்றது.

**“கொண்டல் ஆற்றி விண் தலைச் செறீஇயர்**
**திரைப்பிதிர் கடுப்ப முகடுமுகந்தேறி நிரைத்து,**
**நிறைகொண்ட கமஞ்சூல் மாமழை” (நற்.89: 1-3)**
**“காலமாரி மாலை மாமலை**
**இன்இறை உருமினம் முரலும்” (குறுந்.200: 5-6)**
**“மங்குல் மாமழை விண் அதிர்பு முழங்கி**
**துள்ளுப் பெயல்…………..” (அகம்.294: 1-2)**

எனப் பலவாறாக மழை பொழியும் தன்மை சுட்டப் பெறுகின்றது.

பெருமளவு பொழிந்த கார் கால மழை, ஆலங்கட்டிகளோடு சிதறி வீழ்தலைக் கீழ்க்காணும் சங்கப்பா நிறுவுகின்றது.

**“இருவிசும்பு இவர்ந்த கருவி மாமழை**
**நீர்செறி நுங்கின் கண் சிதர்ந் தவைபோல்**
**சூர்பனிப் பன்ன தண்வரல் ஆலியொடு**
**பரூஉப் பெயல் அழிதுளி தலைஇ வான் நவின்று**
**குரூஉத்துளி பொழிந்த பெரும்புலவர் வைகறை” (அகம்.304: 1-5)**

கழங்குக்காய் போன்று ஆலங்கட்டி மழை பெய்ததை,

**“கழங்குறழ் ஆலியொடு கதழுறை சிதறிப்பெயல்” (அகம்.334: 8)**

என அகநானூறு எடுத்துரைக்கின்றது.

கார்காலம் குளிர்ந்த தன்மை உடையது என்பதை “தண்பதக் காலை” என்று அகநானூறு குறிப்பிடுகின்றது.

**“வண்டினம் தவிர்க்கும் தண்பதக் காலை” (அகம்.244: 6)**

கார்காலத்தில் தொடக்ககால மழைக்குப் பின்பு கார்மழை வேகமாகப் பொழிந்தது என்பதை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“தனிபெறு தண்புலத்துத் தலைப்பெயல்”** (கலி.101: 1)

என்றும்

**“மாரிஇரீஇ மான்றன்றால் மழையே”** (நற்.381: 10)

**“வளமழை பொழிந்த வால்நிறக் களரி”** (அகம்.344: 1)

**“மாமழை யிடியூஉத் தளி சொரிந்தன்றே”**(ஐங்.423: 1)

**“இருவிசும்பு அதிர முழங்கி அரநலிந்ருது**
**இருபெயல் அழிதுளி தலைஇ வானம்”** (அகம்.274: 1-2)

என்றும் துளித்துளியாகப் பெருகிய கார்கால மழை எடுத்துரைக்கப் பெறுகிறது. கார்கால மழை அதிர்ந்துப் பெய்யும். மழையோடு மின்னல் பலவாறாக மின்னும் என்பதை நற்றிணைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**“தண்புதல் முல்லை அணிபெற மல**
**வண்பெயல் கார்வரு பருவம்”** (நற்.248: 3-4)

**“மாலை அந்தி மால்அதர் நண்ணிய**
**பருவம் செய்த கருவி மாமழை”** (நற்.238: 4-5)

கார்கால மழையின் இறுதிக்காலம் பெயல் கடைநாள் என்று குறிக்கப்பெறுகின்றது. மிகுதியாக மழைபெய்து நீங்கிய கார்ப்பருவம் வாடைக்காற்று வருத்தும் காலமாகும். அத்தகைய கார்காலத்தில் நாள்தோறும் வருத்துகின்ற வாடைக்காற்று வந்ததை,

**“வான் இகுபு சொரிந்த வயங்கு பெயற் கடைநாள்”** (நற்.142: 1)

**“அழிதுளி கழிப்பிய வழிபெயற் கடைநாள்”** (நற்.89: 4)

என்னும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

**“சிதறல்அம் துவலை தூவலின் மலருந்**
**தைஇ நின்ற தண் பெயற் கடைநாள்”** (அகம்.24: 4-5)

மழைப்பொழிவு மாறிய நிலையை, பெயல்கடை நாள் என்றும் அழைத்துள்ளனர்.

**“வானிழுபு சொரிந்த வயங்கு பெயல் கடைநாள்”** (நற்.142: 1)

**“அழிதுளி கழிப்பிய வழி பெயற் கடைநாள்”** (நற்.89: 4)

என்றும் மழை மாறிய கார்காலத்தின் இறுதிச் சூழலை அறிய முடிகிறது.

**“காரும் மாலையும் முல்லை”** (தொல்.பொரு.அகத்.நூ.6)

படுமலைப் பாலை என்னும் பண்ணோசை போல் பேரொலியாய் மழை பொழிந்தது. அவ்வாறு பெய்த மழையை ஏற்றது முல்லை நிலம் என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

**“பாணர் படுமலை பண்ணிய ஏழா லின்**
**வானத்து அஞ்சுவர் நல்லிசை வீழ**
**பெய்த புலத்துப் பூத்த முல்லை”** (குறுந்323: 2-4)

**கூதிர்காலம்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்திற்கான பெரும்பொழுதாகத் தொல்காப்பியர் கூதிர்பருவத்தைக் குறிப்பிடுகின்றார்.

**“குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்” (தொல்.பொருள்.அகத்.நூற்.6)**

ஐப்பசி, கார்த் திகை ஆகிய இருதிங்களுக்குரிய பருவம் கூதிர்காலப் பருவம் ஆகும். மேலும்

**“பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப”**

**(தொல்.பொருள்.அகத்.நூற்.7)**

மழைக்காலத்தின் முற்பகுதி கார் எனவும், பிற்பகுதி கூதிர் எனவும் கொள்ளப்படும். உடன் உறைந்திருப்பாருக்கு வாடையைச் சுமந்து வரும் இக்கூதிர்காலம் இன்பத்தையும், பிரிந்திருப்போர்க்கு துன்பத்தையும் அளிக்கும் காலமாகும்.

கார்காலத்து மழை பெய்து முடித்தபின் மேகத்தில் எஞ்சி இருக்கும் துளிகள் இக்கூதிர்காலத்தில் வீழும். மழை பொழிந்து சிறுசிறு துளியாகப் பெய்கின்ற குளிர்ச்சி பொருந்தியது. வாடைக் காற்றினை உடையது என்று கூதிர்காலத்தின் தன்மையை குறுந்தொகையும் அகநானூறும் எடுத்தியம்புகிறது.

**“நுண்உறை அழிதுளி தலைஇய**
**தண்வரல் வாடையும், பிரிந்திசினோர்க்கு அழல்” (குறுந்.35: 4-5)**
**தண்வரல் அசைஇய பண்புஇல வாடை” (அகம்.58: 11)**

கூதிர்ப் பருவ இறுதி நாளில் குறைந்த அளவு மழை பொழியும். குறைந்த மழை கொண்ட கூதிர்பருவ இறுதிநாள் தாழ்பெயற் கடைநாள் என்று அழைக்கப்பட்டுள்ளதை அகநானூறு குறிப்பிடுகிறது.

**“தண்மழை பொழிந்த தாழ்பெய் கடைநாள்” (அகம்.163: 2)**

குளிர் கால நீர் கலங்கி குளிர்ந்து இருக்கும். இது தண்கலிழ் என்று குறிப்பிடப்படுகின்றது.

**“கூதிர் ஆயின் தண்கலிழ் தந்து” (ஐங்.45: 1)**

**முன்பனிக்காலம்**

மார்கழி, தை ஆகிய இருதிங்களுக்குரிய பருவம் முன்பனிக்காலம் ஆகும். அச்சிரம் என குறிக்கப்பெறுகின்றது. மழைபெய்து வெளிறிய மேகமானது சில நுண்துளிகளைத் தூவும். வாடையோடு நடக்கும் பருவம். பிரிந்தோருக்கு பெருந்துன்பம் தரச் செய்யும் காலமாகும். மழை பொழிந்து முடித்த பின் வரும் வாடைகமழ்கின்ற பனிப்பருவத்தின் கடுமை பல பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**“பெரும்பெயல் பொழிந்த தொழில் தெற்கு**
**ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்” (நற்.5: 5-6)**
**“வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்” (குறுந்.332: 1)**
**“முளரி கரியும் முன்பனிப் பானாள்**
**குன்று நெகிழ்பு அன்ன குளிர்கொள் வாடை” (அகம்.163: 8-9)**

வாடைக்காற்று வடந்தை எனவும் அழைக்கப்பெறும்.

**“பையென வடந்தை துவலை தூவ” (நற்.152: 5-6)**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

இப்பனிப்பருவம் பெரிதும் துன்பத்தைச் சுமந்து வரும் பருவமாகும்.

**பின்பனிக்காலம்**

பின்பனிப் பருவத்திற்குரிய மாதம் மாசி, பங்குனி ஆகும். பின்பனிக்காலம் பாலைக்கு உரியது என்பதை,

**“பின்பனி தானும் உரித்தென மொழிப”** (தொல்.பொருள்.அகத்.நூற்.12)

குறிஞ்சியும் முல்லையும் முறைமையிற் திரிந்த நிலமே பாலையாகும். பெரும்பொழுதாக இளவேனிலும்,முதுவேனிலும், பின்பனிக்காலமும் குறிக்கப்பெறுகின்றது.

நூலற்ற முத்து வடத்திலிருந்து தணித்து உதிர்ந்த முத்துக்கள் போலக் குளிர்ந்த பனித்துளிகள் துளிர்க்கும் காலம் என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது.

**“நூல்அறு முத்தின் தணசிதர் உருப்பத்**
**தாளித் தண்பவர் நாள் ஆமேயும்**
**பனிபடுநாளே”** (குறுந்.104: 2-4)

பின்பனிக்காலத்தின் வாடை கொடுமையானதாகவும் பல்நடுக்கம் தருவதாகவும் அமைந்து இருப்பதை,

**“புகையெனப் புதல் சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா**
**முகை வெண்பல் நுதிபொர முற்றிய கடும்பனி”** (கலி.31: 19-20)

எனக் கலித்தொகை குறிப்பிடுகிறது.

பனியும் வாடையும் விரவிக் காணப்படும் பருவம் பின்பனி என்று அகநானூறும் நற்றிணையும் எடுத்துரைக்கின்றன.

**“புலம்பொடு வந்த பொழுது கொள் வாடை”** (அகம்:13: 21)
**“பனிகடி கொண்ட பண்புஇல் வாடை”** (அகம்.235: 15)
**“பெரும்பெயல் பொழிந்த வழிநாள் அமையத்து”** (நற்.157: 2)
**“மாரி நின்ற மையல் அற்சிரம்”** (நற்.312: 5)

இச்சான்றுகள் பின்பனிக்காலத்தின் தன்மையை விளக்கி நிற்கின்றன.

பகலிலும் இருள் பரப்பியும் பனியானது புகையின் நிறத்தைப் போன்று சூழ்ந்தும் இருந்த பனிக்காலம் நீங்கியதை,

**“பாஅய் அன்ன பகல் இருள் பரப்பி**
**புகைநிற உருவின் அற்சிரம் நீங்க”** (அகம்.317:2-3)

என்று அகநானூறு குறிப்பிடுகிறது.

பின்பனிப் பருவத்தில் வாடை கொடியதாக வீசப் பெறும் என்பதை,

**“இம்மென இறைக்கும் வாடை இருள்கூர் பொழுது”** (நற்.109:5-6)
**“மின்னிடை நடுங்கம் கடைப்பெயல் வாடை”** (குறுந்.277:6)

எனவும் வாடைக்காற்றின் தன்மை குறிப்பிடப்பெறுகின்றது.

**இளவேனில் காலம்**

இளவேனிற்காலம் பாலைத் திணைக்குரியதாகப் பேசப்பெறுகின்றது. இலக்கியம் யாத்த புலவர்கள் இளவேனிற் காலத்தை காமர் வேனில், இன்னமர் வேனில்,மேதகு இளவேனில், தண்பத வேனில், முற்றா வேனில், இன்ப வேனில்,


http://Creativecommons.org//license/by/4.0/.

பெரும்பத வேனில் என்று பல திறம்பட்ட தன்மைகளில் புனைகின்றனர். சித்திரை, வைகாசி இளவேனிற் பருவத்திற்குரிய திங்களாகும்.

இளவேனிற் குறித்து, சங்க இலக்கியங்கள் பரவலாகக் குறித்தாலும், ஐந்து திணைகளில் பாடப்பெற்ற கவித்தொகையில் பாலைக்கென்றே பேசப்பெற்ற கலிப்பாடல்களில் இது விளக்கமாகப் புனையப்படுகின்றது. திணைச் சூழ்நிலைகள் மக்கள் ஒழுக்கத்தோடு உறவு மேற்கொண்டதைச் "சங்ககால மக்கட் பாகுபாடும் வாழ்க்கையும் ஒழுக்கமும் நில இயற்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன" என்னும் கூற்று உறுதி செய்கின்றது. (க.வித்தியானந்தன், தமிழர்சால்பு, ப.8)

**இளவேனிற் கால இயல்பு**

வாடிய மரங்கள் யாவும் கிளைத்துத் தளிர்த்து, அரும்பும் இளவேனிற் பருவம் கண்ணுக்கினிய பருவமாகக் காட்சியளிப்பதைப் பல காலமாக விளங்குவதைப் பலதரப்பட்ட சூழ்நிலையோடு காணமுடிகின்றது. இப்பருவத்தில் மரம், செடி, கொடிகளின் தளிர்த்தல் முதல் பூத்துக்காய்த்தல் வரையுள்ள அடுத்தடுத்த செயல்கள்,

**"மடியிலான் செல்வம் போல் மரன் நந்த அச்செல்வம்**
**படியுண்பார் நுகர்ச்சி போற் பல் சினை மிஞுநார்ப்ப**
**மாயவன் மேனி போல் தளிர் ஈனஇ அம்மேனித்**
**தாய கணங்கு போல் தளிர் மிகைத் தாது உக**
**மலர்தாய பொழில் நண்ணி மணிநீர கயம் நிற்ப**
**அலர்தாய துறை நண்ணி அயிர் வரித்து அறல்வார**
**நனியள்ளும் குயில் நோக்கி இணைபு உரு நெஞ்சத்தால்"**

**(கலி. 35:1-7)**

என்ற பாடல் வழி விளக்கப் பெறுகின்றது.

**தண்பத வேனில்**

இளவேனிற் பருவத்தில் பொழில்கள் புதுத் தளிரீன்று மரங்கள் நல்ல நிழல் செய்வதாலும் இப்பருவத்தைத் தண்பத வேனில் என்று குறிக்கின்றனர்.

**"எரிப்பூ இலவத்து ஊழ் கழி பல்மவர்**
**பொரிப் பூம் புள்கின் புகர்நிழல் வரிக்கும்**
**தண்பத வேனில் இன்ப நுகர்ச்சி" (ஐங். 368: 1-3)**

என்னும் அடிகள் மூலம் இன்பநுகர்ச்சி எய்துவதற்கு உகந்தது இளவேனிற் காலம் என்பதை உணரமுடிகின்றது.

**நாட்பத வேனில்**

பெருமழை பொழிதலால் மலர்கள் செறிந்துள்ளதற்கும் வண்டினங்களின் முரலுதலுக்கும் காரணம் இளவேனிற் பருவம் என்பதை நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கிறது.

**"பெரும்பயல் பொழிந்த வழி நாளமையத்துப்**
**பல்பொறி அரவின் செல் புறங்கடுப்ப**
**ஆற்றல் நுணுங்கிய நாட்பத வேனில்" (நற்.157: 2-4)**

கோடைக்காலத்தில் நீர்நிலையானது நீலமணி போலும் தெளிந்த நீரைக் கொண்டு அழகு பெறுதலை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“ஆயின் தண் கலிழ் தந்து**
**வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்” (ஐங். 45: 1-2)**

என்று சங்கப் பாடலடி கூறுகின்றது.

**பிற பொழுது மயங்கிய வேனில்**

இளவேனில் பொழுதில் சிறு பொழுதுகளாகிய மாலையும் கங்குலும் இவையேயன்றி வாடைக்காலமும் மயங்கி வேறுபட்ட சூழ்நிலைகளைச் சித்தரிப்பதை

**“நெடுநிலா திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட**
**கடிமலர் கமழ் நாற்றங்கங்குல் வத்தலைத் தரூஉம்” (கலி.29: 20-21)**
**“யாழ்கொண்ட இமிழ்இசை இயல் மாலை அலைந்தரூஉம்”**
**(கலி.29: 17)**
**“வயங்கு இழை தண்ணென வந்தவிவ்வசை வாடை” (கலி.31: 12)**

எனவும்

**”நோய்சேர்ந்த வைகலான் வாடை வந்தமைந்து அலைத்தரூஉம்”**
**(கலி.29: 13)**

எனவும் தண்மை பொருந்திய இளவேனில் குறிக்கப்பெறுகின்றன.

**முதுவேனில்**

முதுவேனில் பாலைத்திணைக்குரிய பருவமாகப் பேசப்பெறுகின்றது. வெப்பம் மிகுந்த அரிய வெயில் பருவத்தைக் குறிப்பதே முதுவேனிற் பருவமாகும். இப்பருவத்திற்குரிய திங்கள் ஆனி, ஆடி ஆகும். இக்கொடிய கோடைப்பருவம் கோடைக்காற்று வீசும் பருவம் என்றும் பயிரினங்களும் பல்வேறு உயிரினங்களும் வாடுகின்ற வெப்பம் செறிந்த பருவம் என்றும் பகுத்துக் கூறுகின்றது

**முதுவேனில் தன்மை**

முதுவேனில் கோடைப்பருவம் நிகழும் மாதங்களாகும். கோடைப் பருவத்தில் காலையும் மாலையும் கூட நண்பகல் போல வெம்மை மிக்குத் தோன்றும். அதன் காரணமாகச் சோலைகள் வாடியும் குளம் குட்டைகள் வறண்டும் உலகம் அழகிழந்துப் பயனும் இழந்துப் போனதால் வெஞ்சுரம் என்று குறிப்பிடப்படுகிறது.

ஏனைய பருவம் ஒன்றும் எய்தாமல் வேனிற்பருவம் ஒன்றனையே அறிந்த வெப்பம் வீசுகின்ற நீண்ட சுரம் பசுமையற்று வெம்மை மிகுந்து இருப்பதை

**“நின்ற வேனில் உலர்ந்த காந்தள்**
**அழல் அவிர் நீள் இடை நிழலிடம் பெறாஅது” (நற்.29: 1-2)**

என்று குறிப்பிடுகின்றது.

பாலைக்கலியில் முதுவேனிற் பருவத்தின் தன்மை விரிவாகப் பேசப்பெறுகின்றது. சூரியனின் வெம்மையால் நிலம் கொதித்துப் பரந்து கிடக்கின்ற குன்றுகளைக் கடந்து வெம்மை கொண்ட கோடைக்காலம் என்பதைக் கூறும் கலிப்பாடல் பாலை வெஞ்சுரத்தின் இயல்பை விளக்குகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**“கொதித்துஉராய்க்குன்று இவர்ந்து, கொடிக்கொண்ட கோடையால் ஒதுக்கு அரிய நெறி எண்ணார்இ ஒண்பொருட்கு அகன்றவர்”**

(கலி.150: 15-16)

மேகங்கள் மழைப்பொழியாது கோடையால் அலைக்கழிக்கப்பட்டு, நீரில்லாத கொடுமையின் தன்மையை

**“மணிதிகழ் விறல் மலை வெம்ப மண்பக**
**துணிகயம் துகன்பட்ட தூங்குஅழல் வெஞ்கரம்”** (கலி.20: 5-6)

என்று நவில்கின்றது.

முதுவேனிற் காலத்தில் ஞாயிற்றுக் கதிர்களின் வெப்பம் மிகுந்திருக்கும். பரந்த இருளை விழுங்கிப் பகற்பொழுதைத் தோற்றுவித்த ஞாயிற்றின் காய் சினத்தால் முறுகிய முதுவேனிற் பருவம் என்று வேனிலின் தன்மையைப் பெரும்பாணாற்றுப்படை

**“பகல்கான்று எழுதரு பல்கதிர்ப் பகுதி**
**காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்”** (பெரும். 2-3)

என்று விளக்குகின்றது.

வேனில் பருவத்தில் வைகறைப் பொழுதில் கோடைக்காற்று வீசும் என்பதை

**“வழிநாள் வாசலின்இ கோடை தூக்கு தொறும்”** (நற்.162: 10)

என்று குறிப்பிடுகின்றது.

முதுவேனிற்பருவம் நீடியதால் கோடைக்காற்றினால் காடு வெப்பம் மிகுந்து காணப்படும். இக்கோடைக் காற்று காட்டின் கவினை அழிக்கும். கோடைக் காற்று வீசும் வேனில் காலத்தை

**“வேனில் நீடிய வெங்கடற்று அடைமுதல்”** (அகம்.389: 17)

என்றும்

**“காடு கவின்அழிய உரைஇ கோடை”** (அகம்.173: 12)

என்றும்

**“உதிர்ந்த கோடை உட்குவரு கடத்திடை”** (அகம்.267: 5)

என்றும் குறிப்பிடுவதன் வாயிலாகப் புலனாகின்றது.

**கோடை மழை**

கோடை வெம்மையில் மழை பொழிவதுண்டு. கோடையில் பெய்யும் மழையானது கடுமையான மழைத்துளிகளைப் பெய்து விளங்கும் என்பதனை

**“முழங்கு கடல் முகந்த கமஞ்சூல் மாமழை**
**மாதிர நனந்தலை புதையப் பாஅய்**
**ஓங்கு வரை மினிர ஆட்டிஇ பாம்பு எறிபு**
**வான்புகு தலைய குன்றம் முற்றி**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

**அழிதுளி தலைஇய பொழுதில் புலையன்" (நற்.347: 1-5)**

என்று நற்றிணை கோடை மழையினைக் குறித்து நிற்கிறது.

முடிவுரை

நிலத்தை ஐவகையாகப் பிரித்த தமிழர்கள் காலத்தையும் மிக நுட்பமாகப் பிரித்தார்கள். பெரும்பொழுது எனும் பகுப்பில் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் முதலியன அறிவியல் சார்ந்து அடங்குவதை ஆய்வு நிறுவுகின்றது.

பெரும்பொழுது மக்களின் வாழ்வுக்கு எல்லைக்கற்களாக அமைந்திருந்ததை இயற்கைச் சூழல்களோடும் அகஉணர்வுப் போராட்டங்களோடும் மக்களின் மன உணர்வுகளோடும் புலவர்கள் சிறப்பாகப் பொருத்திக் காட்டியுள்ளதை ஆய்வு நிறுவுகிறது.

துணை நின்ற நூல்:

1. **பதிப்பாசிரியர் முனைவர் ச.வே.சுப்பிரமணியம்**, சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை


http://Creativecommons.org//license/by/4.0/.